[2003 மார்ச் 31

152—

கடன் வசதி

•22728—திரு. ஜெ. அன்பழகன்:

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் செயல்பட்டுவரும் நகர் கூட்டுறவு வங்கிகளில் வழங்கும் வீட்டு அடமானக் கடன் திரும்பச் செலுத்தும் கால அளவை 5 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நகர கூட்டுறவு வங்கிகள் மூலம் வீடு கட்டுதல் மற்றும் வீடு அடமானம் வைத்தல் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் கடன்களைத் திரும்பச் செலுத்தும் கால அளவிலே, 60 மாத, ஐந்து ஆண்டுகள் தவணையிலேயிருந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பின்னால் 180 தவணைகளாக, 15 ஆண்டுகளுக்கும் மற்றும் 120 தவணைகளாக 10 ஆண்டுகளுக்கும் நீட்டித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மூலமாக ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைப் பணிந்து அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் இயங்கிக் கொண்டிருக்கிற தனியார் வங்கிகள், தேசவுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எல்லாம் இன்றைக்குப் போட்டிபோட்டுக் கொண்டு, வீடு கட்டுவதற்கும், வீடு வாங்குவதற்கும், அதேபோல், திருமணச் செலவு, வியாபாரச் செலவு இப்படி பல வகையிலும் கடன்களை, கால அளவுகளை அதிகமாக்கித் தந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய நகர கூட்டுறவு வங்கிகளில் இன்றைக்குத் தேவைக்கு அதிகமாக

2003 மார்ச் 31]

Surplus fund என்று சொல்கிற அளவில் பல வகையில் கோடிக்கணக்கான ரூபாய் இன்றைக்கு முடக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இங்கு பதிலுரையிலே 60 மாத கால அளவை நகர கூட்டுறவு வங்கிகள் 10 ஆண்டுகளுக்கும் அதற்கும் மேலாகவும் மாற்றியிருப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும் சென்னை நகரிலே உள்ள கூட்டுறவு வங்கிகளில் 60 மாத கடன்களைத்தான் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒரேயொரு வங்கிக்கு மட்டும் 7 ஆண்டு காலம் வழங்கலாம் என்று இணைப் பதிவாளர் அனுமதி தந்திருக்கிறார். மீதி உள்ள வங்கிகளுக்கெல்லாம் அந்த அனுமதி கிடைப்பாது. ஆகவே, சென்னை நகர கூட்டுறவு வங்கிகள் இப்படித் தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருந்தால் வரும் ஆண்டுகளில் அந்த Surplus fund அதிகமாக இருக்கிற காரணத்தால் நஷ்டத்திற்கு வரவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே, தமிழக முதல்வர் இதிலே கவனம் செலுத்தி, ஏழையெளிய மக்கள் மட்டுமல்ல, நடுத்தர குடும்பங்களில் உள்ளவர்கள் இன்றைக்கு மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வீடு கட்டவோ அல்லது வீடு அடமானம் வைக்கவோ கூட்டுறவு வங்கிகளை அணுகுகிறபோது 60 மாத கடன்தான் தரப்படும் என்று அதிகாரிகள் எல்லாம் சொல்லுகிற காரணத்தினால் சென்னை நகரிலே உள்ள கூட்டுறவு வங்கிகள் மூலமாக இந்தக் கடன் வழங்கும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா என்பதற்காக ஒரு அரசாங்க ஆணை வெளியிடப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர வங்கி உறுப்பினர்களுக்கு வீடு கட்டுகின்ற கடனும், வீடு அடமானக் கடனும் அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஐந்து இலட்சம் பெறுகிறவர்கள் 60 மாதங்களிலே திருப்பித்தர வேண்டியது 15 ஆயிரம் வரை மாதத் தவணையாகிவிடுகிறது என்பதனால் அந்தப் பகுதியிலே இருக்கிறவர்களும், கூட்டுறவாளர்களும் தெரிவித்த கருத்துக்கு இணங்கத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் இப்பொழுது 180 தவணைகளாக 10-12-2002-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இங்கே உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போன்று அப்படி அங்கே நடைபெற்றிருக்குமானால் அதன்மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்தவாறு அந்த வங்கிகளில் எல்லாம் வழங்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இது கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும் பொருந்துமா அல்லது வீட்டு வசதி சங்கம் Housing Society மூலம் தரப்படும் கடன்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்துமா என்றும் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்படுகின்ற கடன்களுக்கு எல்லாம் இப்பொழுது அதிக Interest rate இருந்து கொண்டிருக்கிறது. தனியார் வங்கிகளில் இப்பொழுது 6½%-க்கு எல்லாம் கடன் கொடுத்துக்கொண்டிருக்கிற காரணத்தாலே தனியார் வங்கிகளுக்கு ஏற்ப இந்தக் கூட்டுறவு வங்கியால் தரப்படும் கடனுக்கும் 6½% வட்டி மட்டுமே வசூலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கோரிக்கைகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. இதற்குத் தக்கதொரு நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. முறையாகத் தக்கதொரு அறிவிப்பு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 153, திரு. ப. இளவழகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

153—

குடிநீர் வரி

•1677—திரு. ப. இளவழகன்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—